**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**P204 இதழியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்' என்னும் கவிதையைப் பாடியவர் யார்?
2. நாளிதழ்களின் பக்க அளவு யாது?
3. காலச்சுவடு என்பது எந்த வகை இதழ்?
4. B.B.C. என்பதன் விரிவாக்கம் என்ன?
5. தகவல் உரிமை மையம் எங்குள்ளது?
6. எத்தகைய செய்திகளை வெளியிடக்கூடாது?
7. பத்திரிக்கையின் இதயம் போன்றது எது?
8. நேர்காணல் என்றால் என்ன?
9. இதழியல் நடை குறித்துத் திரு.வி.க. என்ன கூறுகிறார்?
10. 'மாதிரித் திட்டவரைவு' என்றால் என்ன?
11. தலையங்கம் எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை யாவை?
12. செய்திகளைப் படிப்பவர் மனதில் ஆழப்பதிக்கும் திறன் கொண்டவை எவை?
13. துணுக்கு என்ற சொல்லின் விளக்கம் யாது?
14. விளம்பர பகுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. பத்திரிகையின் செய்திகளை யார் யாரெல்லாம் செம்மையாக்கம் செய்கின்றனர்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. இந்திய இதழ்களின் முன்னோடிகள் குறித்து எழுதுக.
2. செய்தி நிறுவனங்களின் பணி யாது?
3. வாய்ப்பூட்டுச் சட்டம் என்றால் என்ன?
4. செய்தி – சொல் விளக்கம் தருக.
5. செய்தியாளரின் தகுதிகள் யாவை?
6. நேர்காணலின் வகைகள் யாவை? விளக்குக.
7. தலையங்கத்தின் நோக்கம் யாது?
8. அச்சுப்படி திருத்துபவரின் தகுதி யாது?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) இதழ்களின் வகைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களின் பொதுவான நோக்கங்கள் யாவை? விவரி

2. (அ) செய்திகளின் பின்புலம் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) செய்தித்தாளில் பணிபுரியும் துணை ஆசிரியர்களின் பங்களிப்பு, தகுதிகள், கடமைகள் குறித்து விளக்கி வரைக.

3. (அ) இன்றைய விளம்பரத்தின் நிலை குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) இதழ்களின் மொழிநடை வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் திரு.வி.க செய்த பணி குறித்து விளக்குக.

* * *